ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2085/46 - 2018 අගෝස්තු මස 24 වැනි සිකුරාදා - 2018.08.24

*2085/46 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை, கட்டிடக் கலைஞர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

*2014.08.28 ஆந் திகதிய 1877/ 28 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2014.10.01 ஆந் திகதிய 1882/ 18 ஆம் இலக்க, 2016.02.02 ஆந் திகதிய 1952/ 20 ஆம் இலக்க மற்றும் 2016.11.24 ஆந் திகதிய 1994/68 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிகளின் மூலம் திருத்தியமைக்கப்பட்டதுமான, இலங்கைக் கட்டிடக் கலைஞர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் பின்வரும் திருத்தங்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதுடன், அதில் உள்ள ஏனைய விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் எவ்வித மாற்றங்களுமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.*

*01. 7.3.2.1 கல்வி/தொழிற் தகைமைகள் மற்றும் அனுபவம் :*

I *7.2.2.1 இன் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் 05 வருடங்கள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 06/ 2006 இன் MN 2 அல்லது அதற்கு மேலுள்ள சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளத்தினைப் பெறும் அலுவலர்கள் ;*

II *இலங்கைக் கட்டிடக் கலைஞர் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறி - 1 ஆம் பகுதி சித்தியெய்தியுள்ள அரசாங்க சேவையின்/மாகாண அரசாங்க சேவையில் 10 வருடங்கள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைக் கொண்ட அலுவலர்கள் ; மற்றும்*

III *உடன் முன்னரான 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்துடன் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் விசேட வகுப்பிலுள்ள திட்ட வரைபடக் கலைஞர்கள்.*

*02. 7.3.2.3 ஏனைய*

II *உடன் முன்னரான 05 வருட காலத்தில் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூரணப்படுத்தியிருத்தல்.*

IV *சேவையில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.*

1A - G 28357 — 17 (2018/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

03. 10.2.1 பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகள்

I சேவை வகுதியின் II ஆம் தரத்தில் ஐந்து (05) வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் உரிய சம்பள ஏற்றங்கள் ஐந்தினைப் (05) பெற்றிருத்தல்.

04. 11.2 தேர்ந்தெடுக்கப்படும் முறை

(அ) (ஆ) மற்றும் (இ) இல் எவ்வித மாற்றமும் இல்லை.
மேலே (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நேர்முகப் பரீட்சை :

| பரீட்சித்துப் பார்த்து புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் | உச்சப் புள்ளிகளின் அளவு | தேர்ந்தெடுப்பதற்காக கருத்திற் கொள்ளப்படும் குறைந்தபட்ச புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| 1. சேவை அனுபவம் | 65 | ஏற்புடையதல்ல |
| 2. திறமை | 30 | |
| 3. நேர்முகப் பரீட்சையின்போது வெளிப்படுத்தும் திறமை | 05 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

எம். ஏ. பி. தயா செனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

2018, ஓகத்து 04.

09-210

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.